DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.16/2026

PW - 1

| | | |
|---|---|---|
| Name | : | ருக்மணி (Lw - 1) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(**எதிரி ஆஜர்**)**

முதல் விசாரணை **Date : 05.05.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், எல்லிபாளையம் போயர் வீதியில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன்.

கடந்த 03.09.2025ம் தேதி காலை சுமார் 05.30 மணிக்கு எனது கணவர் மணி டீ குடிக்க அக்கியம்பட்டியில் உள்ள டீ கடைக்கு டீ குடிப்பதற்காக சென்றார். சிறிது நேரத்தில் எனது உறவினர் ஒருவர் எனது வீட்டிற்கு வந்து எனது கணவருக்கு அக்கியம்பட்டி டு வடுகப்பட்டி செல்லும் ரோட்டில் கண்ணம்மா வீட்டின் அருகே எதிரி அதிவேகமாக ஸ்கூட்டியை ஓட்டிவந்து விபத்தை ஏற்படுத்தியதாக தகவல் கூறினார். நான் அங்கு சென்று பார்த்தபோது எனது கணவருக்கு கழுத்து மற்றும் தலையில் பலத்த இரத்த காயம் ஏற்பட்டிருந்தது. பின்னர் எனது கணவரை நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் அங்கு பரிசோதித்து பார்த்துவிட்டு எனது கணவர் இறந்துவிட்டதாக கூறினார்கள். இது சம்மந்தமாக நான் சேந்தமங்கலம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகார் மனுவில் உள்ள கைரேகை என்னுடையதுதான். **(**புகார் மனு அ**.**சா**.**ஆ**.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** பின்பு பிரேத விசாரணை, பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை எங்களிடம்

ஒப்படைத்தார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது கணவருக்கு காது கேட்காது என்றால் கொஞ்சம் காது கேட்காது. புகார் மனுவில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் கூற கூறதான் புகார் மனு எழுதப்பட்டது. புகார் மனுவை எனக்கு யாரும் படித்து காண்பிக்கவில்லை என்றால் சரிதான். புகார் மனுவை நான் கூற எழுதப்படவில்லை என்றாலும் ஏற்கனவே காவல்நிலையத்தில் போலிசார் எழுதி வைத்திருந்த புகாரில் கையொப்பம் செய்துவிட்டு இழப்பீடு பெறவேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் இறந்ததற்கு இழப்பீடு பெறவேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**